தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24357580.*

**வழக்கு எண். 24468 / விசாரணை / 2009**

**<u>விசாரணை நடைபெற்ற நாள் 27.01.2010.</u>**

| | |
|---|---|
| **முன்னிலை :** | **திரு. தி.சீனிவாசன். எம்.எஸ்சி.,**<br>**மாநில தகவல் ஆணையர்** |
| **மனுதாரர் :** | **திரு. என். தர்மராஜன்,**<br>**த/பெ. நாகசாமி,**<br>**5/192,சத்தியமூர்த்தி தெரு,**<br>**பரமக்குடி – 623 707,**<br>**இராமநாதபுரம் மாவட்டம்.** |
| **பொது அதிகார அமைப்பு :** | **பொதுத் தகவல் அலுவலர்,**<br>**ஆணையர் அலுவலகம்,**<br>**பரமக்குடி நகராட்சி,**<br>**பரமக்குடி,**<br>**இராமநாதபுரம் மாவட்டம்.** |

------

மனுதாரர் திரு. என். தர்மராஜன் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் சார்பாக திரு. எஸ். மூர்த்தி, அலுவலக மேலாளர், ஆணையர் அலுவலகம், பரமக்குடி நகராட்சி, பரமக்குடி இவ்வாணையத்தில் இன்று (27.01.2010) நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் 20.07.09 அன்று 2 இனங்களில் தகவல் கேட்டு மனு செய்துள்ளார். மனுதாரருக்கு தகவல் கிடைக்காததால் 27.08.09 அன்று மேல்முறையீடு செய்துள்ளார். 24.09.09 அன்று மேல்முறையீட்டு அலுவலர், பரமக்குடி நகராட்சியால் மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் குறிப்பிட்டு மனுதாரர் கைப்பட எழுதிய மனுவின் நகல் மனுதாரருக்கு தரப்படவில்லை என்று 30.09.09 அன்று இவ்வாணையத்திற்கு மேல்முறையீடு செய்த மனு இன்று (27.01.2010) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையில் மனுதாரர் 2 இனங்களில் தகவல் கேட்டதாகவும், முதல் இனத்திற்கு தகவல் தரப்பட்டதாகவும், இரண்டாவது இனத்திற்கு மனுதாரரால் நகராட்சி நிர்வாகத்திற்கு மனுதாரர் கைப்பட எழுதிக் கொடுத்த விண்ணப்பத்தின் நகல் கேட்டதாகவும்,

மனுதாரருக்கு அம்மனு அவ்வலுவலகத்தில் இல்லை என்று தகவலாக தெரிவிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். இது குறித்து பொதுத் தகவல் அலுவலர் சார்பாக வந்திருந்தவர் வரி விதிப்பு குறித்து அளிக்கப்படும் விண்ணப்பங்கள் வரி விதிப்பு ஆணை பிறப்பிக்கப்பட்ட ஓராண்டு வரை பராமரிக்கப்பட்டு அழிக்கப்படுவதாக தெரிவித்தார். இதற்கு நகராட்சி விதிகளில் குறிப்பிட்டு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மனுதாரர் குறிப்பிட்டுள்ள மனு 2001–ம் ஆண்டு அளிக்கப்பட்ட மனு என மனுதாரர் தெரிவித்தார். 2001–ம் ஆண்டு மனுதாரரால் வரிவிதிப்பிற்காக வழங்கப்பட்ட மனு அழிக்கப்பட்டது குறித்து எந்த ஆவணமும் விசாரணையில் பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்படவில்லை. எனவே விசாரணை முடிவில் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள விண்ணப்ப மனு அவ்வலுவலகத்தில் அழிக்கப்பட்டது குறித்து உரிய நகராட்சி விதிகளையும், அலுவலக ஆவணங்களிலிருந்து உரிய ஆதாரத்தையும் இணைத்து பிரமாண வாக்குமூலத்தை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 10 தினங்களுக்குள் இவ்வாணையத்திற்கு அனுப்புமாறு பொதுத் தகவல் அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். இவ்வாணையத்திற்கு அனுப்பும் அனைத்து நகலையும் மனுதாரருக்கு தகவலாக அனுப்பி வைக்குமாறும் பொதுத் தகவல் அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 01.02.2010** **தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**( சு. மோகன தாஸ் )**
**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். 24468/09</u>**
**பெறுநர்**
**பொதுத் தகவல் அலுவலர்,**
**ஆணையர் அலுவலகம்,**
**பரமக்குடி நகராட்சி,**
**பரமக்குடி,**
**இராமநாதபுரம் மாவட்டம்.**

**திரு. என். தர்மராஜன்,**
**த/பெ. நாகசாமி,**
**5/192,சத்தியமூர்த்தி தெரு,**
**பரமக்குடி – 623 707,**
**இராமநாதபுரம் மாவட்டம்.**